தரம் 08

பாடசாலை மட்ட மூன்றாம் தவணை மதிப்பீடு - 2023(2024)

# செயன்முறைத் தொழில் நுட்பத்திறன்கள்

புள்ளி

சுட்டெண் :

நேரம்: 2 மணித்தியாலங்கள்

## பகுதி - I

* மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. இரைகௌவிகளின் ஆதாரங்கள் எனப்படுவது
(1) வெறுப்பூட்டும் தாவரங்கள் (2) பிரச்சினைகளை முதலாவதாக காட்டும் தாவரம்
(3) பொறிப்பயிர்கள் (4) விருந்து வழங்கித் தாவரங்கள்

02. அலங்கார கைப்பணிக் கைத்தொழிலுக்காகப் பயன்படுத்தக்கூடிய தாவரம்
(1) சல்வீனியா (2) நீர்முள்ளி (3) பன்வகை (4) தாமரைக்கிழங்கு

03. வளியுடன் தாக்கமடையும் போது கபிலநிறமடையும் உணவு
(1) கத்தரி (2) அப்பிள் (3) வாழை (4) யாவும் சரி

04. உலோகத்திற்குரிய முன்மினுக்கிப் பதார்த்தம்
(1) மரநற்காப்பி (2) நிரப்பி வகைகள் (3) மினுக்கி கடதாசி (4) அரக்கு

05. விளம்பர ஊடகம்
(1) அறிவுறுத்தல் (2) துண்டுப் பிரசுரங்கள் (3) நினைவூட்டல் (4) வலுவூட்டல்

● பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( ✗ ) எனவும் அடையாளமிடுக.

06. மேலதிக நீர் மண்ணிலிருந்து வெளியெறுதல் நீர்வடிப்பு எனப்படும். ( )

07. மழைவீழ்ச்சியினால் போசிக்கப்படும் நிலக்கீழ் நீர் பசுமையான நீர் வளங்கள் எனப்படும். ( )

08. உணவு பழுதடைதலில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணி 3 வகைப்படும். ( )

09. இயங்கும் பகுதிகளுக்கு இடையிடையே உராய்வு நீக்கிகளை இடுதல் வேண்டும். ( )

10. விற்பனை மேம்படுத்தலின் அடிப்படைக்கூறுகள் மூன்றாகும். ( )

- பொருத்தமான விடையைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

(ஒளிகாலும் இருவாயி, நீரகற்றிகள், போசணைப் பெறுமானம், தாமரைக் கிழங்கு, பூகோள ரீதியான அமைவிடம் )

11. மருத்துவ குணமுள்ள தாவரங்களில் ............................................................ ஒன்றாகும்.

12. உணவை நீண்ட காலம் பேணுவதற்காக ............................................ பயன்படுத்தப்படுகின்றன.

13. காட்டியாகவும் ஒளிச்சுற்றுக்களிலும் ............................................................ பயன்படுகிறது.

14. உற்பத்தியாளர் ஒருவர் அறிந்து கொள்ள வேண்டிய சமூகக் காரணி ..............................................

15. தரரீதியான இழப்புக்களில் ............................................................................ ஒன்று

- பொருத்தமானதை இணைக்குக.

| | | | |
|---|---|---|---|
| 16. | போதுமான அளவில் சூரிய ஒளி கிடைக்காமை | A. | அமுக்கவடுகலன் |
| 17. | திறந்தவெளி வளர்ப்பு முறை | B. | கண்காட்சிகள் |
| 18. | கிருமியழிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணம் | C. | கொள்ளளவி |
| 19. | ஏற்றத்தை தற்காலிகமாக சேமித்து வைத்தல் | D. | அருகிலுள்ள தாவரங்களை கத்தரித்தல் |
| 20. | விளம்பர ஊடகம் | E. | ஊழியர் தேவை குறைவு |

($2\times20=40$ புள்ளிகள்)

## பகுதி - II

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

**01.** (i) வீட்டுத்தோட்டத்தின் அளவைத் தீர்மானிக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் 3 தருக

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

**(3 புள்ளிகள்)**

(ii) அமைந்துள்ள இடத்திற்கமைய நீரை வகைப்படுத்துக.

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

**(3 புள்ளிகள்)**

(iii) தடாகங்கள் என்றால் என்ன?

..................................................................................................................................

..................................................................................................................................

**(3 புள்ளிகள்)**

(iv) உள்ளக அடைப்பு (தீவிர) வளர்ப்பு முறையின் பிரதிகூலங்கள் 4 தருக.

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

**(3 புள்ளிகள்)**

**02.** (i) உணவின் சுகாதார ரீதியான தன்மைகள் 3 தருக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

(3 புள்ளிகள்)

(ii) குளிரூட்டல் என்றால் என்ன?

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

(2 புள்ளிகள்)

(iii) குளிரூட்டியில் வைக்கப்படும் உணவுகளின் பொதுவான வெப்பநிலையைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................

(1 புள்ளிகள்)

(iv) தரரீதியான இழப்புக்களினால் ஏற்படும் பாதிப்புகள் எவை

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

(3 புள்ளிகள்)

(v) அறுவடைக்குப் பின்னரான இழப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 3 தருக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

(3 புள்ளிகள்)

**03.** (i) திரான்ஸிஸ்டரில் காணப்படும் முனைகளைத் தருக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

(3 புள்ளிகள்)

(ii) ஒளியுணர் தடையியின் தொழிற்பாடு யாது?

..........................................................................................................................................

..........................................................................................................................................

( 3 புள்ளிகள் )

(iii) சுற்றுப் பலகைகள் எத்தனை வகைப்படும்? அவை எவை?

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

(3 புள்ளிகள்)

(iv) பலநோக்கு உற்பத்திகளைக் கொண்ட பொருட்களை பயன்படுத்துவதனால் கிடைக்கும் நன்மைகள் எவை?

..........................................................................................................................................

..........................................................................................................................................

.......................................................................................................................(3 புள்ளிகள்)

**04.** (i) வணிக எண்ணக்கரு என்றால் என்ன?

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

**(3 புள்ளிகள்)**

(ii) சந்தை ஆய்வு தொடர்பான விடயங்கள் 3 தருக.

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

**(3 புள்ளிகள்)**

(iii) விற்பனை மேம்படுத்தலின் அடிப்படைக்கூறுகளைத் தருக.

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

**(3 புள்ளிகள்)**

(iv) கிரயத்தைக் குறைத்துக் கொள்ளக்கூடிய முறைகள் 3 தருக.

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

**(3 புள்ளிகள்)**

**05.** (i) இலங்கையில் விவசாயத் துறைக்கு உதவும் கங்கைகள் 3 தருக.

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

**(3 புள்ளிகள்)**

(ii) அறுவடைக்குப் பிந்திய இழப்பு என்றால் என்ன?

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

**(3 புள்ளிகள்)**

(iii) பின்வரும் உபகரணங்களின் / பொறிகளின் தொழிற்பாடுகளின் நேரே உபகரணங்கள் / பொறிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

(a) போக்குவரத்து : ..........................................................................

(b) இரவுப் பயணத்தின் போது ஒளியைப் பெறுதல் : ..........................................

(c) சுவைச் சரக்குகளைத் தூளாக்குவதற்கு :...................................................

**(3 புள்ளிகள்)**

(iv) அடுக்கி வைக்கக்கூடிய தயாரிக்கப்பட்ட பொருட்கள் 3 தருக.

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

(3 புள்ளிகள்)

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි] (முழுப் பதிப்புரிமையுடையது) All Rights Reserved]

# பாடசாலை மட்ட மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023(2024)

Grade 08

## செயன்முறைத் தொழில் நுட்பத்திறன்கள்

## விடையும் புள்ளித் திட்டமும்

### பகுதி - I

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 4 | 02. 3 | 03. 4 | 04. 1 | 05. 2 |
| 06. ✓ | 07. ✓ | 08. ✓ | 09. ✓ | 10. ✓ |

11. தாமரைக்கிழங்கு
12. நீரகற்றிகள்
13. ஒளிகாலும் இருவாயி
14. பூகோள ரீதியான அமைவிடம்
15. போசணைப் பெறுமானம்
16. அருகிலுள்ள தாவரங்களைக் கத்தரித்தல்
17. ஊழியர் தேவை குறைவு
18. அமுக்கவடு கலன்
19. கொள்ளளவி
20. கண்காட்சிகள்

### பகுதி - II

01. (i)
- நிலத்தின் பரப்பு
- நீர்வசதி
- வீட்டுத்தோட்டத்திற்காக செலவிடக்கூடிய பணத்தின் அளவு செலவிடக்கூடிய நேரம்
- செலவிடக்கூடிய நேரம்
- வீட்டுத்தோட்ட நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய நபர்களின் எண்ணிக்கை
- பொருத்தமான பயிர்களைத் தெரிவு செய்தல்

(ii)
- வளிமண்டல நீர்
- மேற்பரப்பு நீர்
- தரைக்கீழ் நீர்

(iii)
- ஆறு நிரம்பி வழிந்தோடுவதனால் உருவாகும் ஆற்றுச்சமவெளியில் இயற்கையாக தோன்றக்கூடிய ஆழமற்ற சிறிய நீர்த்தேக்கம் தடாகம் எனப்படும்.

(iv)
- அதிக உழைப்பு தேவைப்படும்
- விலங்குகளின் இயற்கையான நடைவடிக்கைகளில் பாதிப்பு ஏற்படும்
- மனை அமைப்பதற்கான செலவு அதிகம்
- உணவு வழங்குவதற்கான செலவு அதிகம்.

02. (i)
- மூலப்பொருளில் அகற்றவேண்டிய பாகங்களை அகற்றுதல்
- சுத்தமான நீரில் பலதடவைகள் கழுவுதல்
- நசிவடைந்த, கீறலடைந்த மூலப்பொருள்களை தவிர்த்தல்

(ii)
- $4^{0}C$ தொடக்கம் $8^{0}C$ வரையான வெப்பநிலையில் உணவை களஞ்சியப்படுத்தல் குளிருட்டல் எனப்படும்.

(iii)
- $3^{0}C$ - $4^{0}C$

(iv)
- நுகர்வோர் அவற்றை உணவாகப் பயன்படுத்துவதில் காட்டும் விருப்பு குறையும்
- சந்தைப் பெறுமதி குறையும்
- விளைச்சல்களின் தரப்பண்பில் ஏற்படும் இழுப்பை அளவிடல் சிரமமானதாகும்.

(v)
- பயிர் செய்யும் காலத்தில் உரிய முறையில் பராமரிக்காமை
- அறுவடை செய்த விளைச்சலை தரப்படுத்தாமை
- உரிய பொதியிடல் முறையைப் பயன்படுத்தாமை.
- உரிய முறையில் களஞ்சியப்படுத்தாமை
- உரிய முறையில் கொண்டு செல்லாமை

03. (i)
- அடி
- சேகரிப்பான்
- காலி

(ii)
- ஒளியுள்ளபோது இருளில் தேவைக்கேற்றவாறு சுற்றினை தன்னியக்கமாகத் தொழிற்படச் செய்ய பயன்படுத்தப்படும்.

(iii)
- 2
- செயற்றிட்டப்பலகை
- புள்ளித்தாயப்பலகை

(iv)
- குறைந்த இடப்பரப்பைப் பயன்படுத்தல்
- பயன்படுத்த இலகுவாக அமைத்தல்
- களஞ்சியப்படுத்த குறைவான இடம் தேவைப்படல்

04. (i)
- சந்தை இடைவெளியை அறிந்து கொள்ளும் முயற்சியாளர்கள் தேவைகள், விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு முன்வருதல் வணிக எண்ணக்கரு எனப்படும்.

(ii)
- இலகு சந்தை
- நுகர்வோர் திருப்தி
- சந்தை துண்டமாக்கல்
- சந்தை பரந்துள்ள முறை
- நுகர்வோரின் கொள்வனவு சக்தி

(iii)
- தொடர்பாடல்
- ஊக்குவிப்பு
- அழைப்பு

(iv)
- கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை மேற்கொள்ளல்
- உற்பத்தியின் தரத் தன்மைக்குப் பொருந்தக்கூடியதாக அமைவதற்குத் தேவையான உள்ளீடுகளை மட்டும் கொள்வனவு செய்தல்.
- மூலப்பொருள்களைக் கொள்வனவு செய்யும் போதும் உற்பத்திக்குப் பயன்படுத்தும் போதும் விளைதிறன் உச்சமாகும் வகையில் அவற்றைப் பயன்படுத்துதல்.
- ஊழியர்களின் காலத்தை வீண்விரயமாக்காதவாறு அவர்களது உழைப்பை விளைதிறனாகப் பயன்படுத்துதல்.
- சிறந்த தொழினுட்ப முறைமையைப் பயன்படுத்தல்
- தேவையற்ற ஏனைய செலவுகளைத் தவிர்த்தல்.

05. (i)
- மகாவலி கங்கை
- வளவை கங்கை
- ஜின் கங்கை

(ii)
- பயிர்களின் விளைச்சல்களை, அறுவடை செய்யும் சந்தர்ப்பம் முதல் அவை நுகர்வோரை சென்றடையும் சந்தர்ப்பம் வரை ஏற்படும் இழப்புக்கள் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்கள் எனப்படும்.

(iii)
- துவிச்சக்கரவண்டி
- மின்சூள்
- மின் அரைப்பான்

(iv)
- கடதாசிப் பெட்டி
- பிளாத்திக் கதிரை
- பிளாத்திக் வாளி